**கொடக்கவெல பிரதேச சபை - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கொடக்கவெல பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் கொடக்கவெல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப்

பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்
கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 5,151,365 தொகையான பணி நிறைவு செய்யப்பட்ட 02 செயற்திட்டங்கள் மற்றும் 03 கட்டிடங்கள் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது திருத்தப்படும் என்பது. | சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 02 கட்டிடங்களின் பெறுமதி ரூபா 1,100,467 இனால் அதிகரித்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் போது திருத்தப்படும் என்பது. | சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (இ) | 02 கணக்கு விடயங்களின் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகள் மற்றும் பயன்பாட்டு ஆவணங்களின் பிரகாரமான மீதிகளுக்கிடையே ரூபா 886,362 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | வேறுபாட்டுக்கான காரணங்கள் இனங்காணப்பட்டு தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | I. நிதிப்பிரமாணம் 371 (5) இற்கு முரணாக 2012-2022 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியினுள் வழங்கப்பட்ட ரூபா 1,468,165 ஆன முற்பணம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | I. தீர்ப்பனவு செய்யப்படாத முற்பணங்களை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | II. 2007 ஆம் ஆண்டு முதல் 2020 | II. உடன்படிக்கைகள் | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய ரூபா 734,050 கூட்டுத்தொகையான காலாவதியான பல்வேறு வைப்புக்கள் நிதிப்பிரமாணம் 571(2) இன் பிரகாரம் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | வைப்புப் பிணைகள் தீர்ப்பனவு செய்யப்பட்டவுடன் காலாவதியான பல்வேறு வைப்புகள் தீர்ப்பனவு செய்யப்படும். | எடுக்கப்பட |
| (ஆ) | பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 09 பிரதான விடயங்களுக்காக உப விதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | 21 ஆம் உப விதியின் பட்டோலைகள் வருடாந்தம் வர்த்தமானியின் மூலம் பிரசுரிக்கப்படுகின்றமை. | அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,287,136 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 13,544,808 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் கடந்த வருடத்திற்குரிய மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 5,935,099 | 6,392,614 | 5,706,053 | 4,107,494 | 5,916,262 | 6,074,294 | 5,660,660 | 4,045,981 |
| வாடகை | 16,974,811 | 11,363,452 | 10,111,641 | 3,909,026 | 15,788,919 | 9,299,126 | 7,537,017 | 2,668,617 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,974,000 | 1,909,928 | 1,909,928 | - | 1,739,100 | 1,870,692 | 1,870,692 | - |
| ஏனைய வருமானங்கள் | 4,780,466 | 1,549,773 | 4,345,572 | 549,475 | 4,722,260 | 1,983,391 | 4,142,604 | 486,742 |
| | 29,664,376 | 21,215,767 | 22,073,194 | 8,565,995 | 28,166,541 | 19,227,503 | 19,210,973 | 7,201,340 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பு செயலாற்றல் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 05 வருடங்களை விட பழமையான ரூபா 1,210,025 தொகையான நிலுவை வீதவரி மீதியொன்றும், 03 வருடங்களை விட பழமையான ரூபா 152,966 தொகையான ஏக்கர் வரி மீதியும் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிலவியது. | சிவப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டது என்பது மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக சொத்துக்களை தடைவிதித்தல் கடினமானது என்பது மற்றும் கமநலச் சபையின் பிரகாரம் காணிகள் தொடர்பான தகவல் இல்லாதிருந்தமையால் ஏக்கர் வரி மதிப்பீட்டினை மேற்கொள்ள முடியாதிருந்தது. | நிலுவை வருமானம் சேகரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2022 ஆம் ஆண்டின் போது 09 நிறுனங்களின் சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள் புதுப்பிக்கப்பட்டிராமை, 08 தொலைபேசி நிலைமாற்றல் கோபுரங்களின் வியாபார வரி அறவிடப்பட்டிராமையால் ரூபா ரூபா 68,550 ஆன வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | 04 சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள் புதுப்பிப்பதற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் 05 அனுமதிப்பத்திரங்கள் புதுப்பிக்க அறிவிக்கப்பட்டுள்ளமை மற்றும் கோபுரங்களுக்காக வரி செலுத்தப்பட்டிருக்கவில்லை. | வருமானங்கள் தாமதமின்றி அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 5,654,649 கிரயமான மாதம்பே மீன் சநட்டதையை மீள நிர்மாணிப்பதற்று ரூபா 2,771,927 செலவிடப்பட்டிருந்தது. எனினும், நிர்மாணங்களிலான குறைபாடுகளை சுட்டிக்காண்பித்து வியாபாரிகளில் ஒரு பகுதியினர் சந்தைக்கு முன்பாக மீன் விற்பனையில் ஈடுபட்டவாறு காணப்பட்டனர். | அந்த வியாபாரிகளுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது. அத்துமீறிய வகையில் போடப்பட்டுள்ள கடைகளை அகற்றுமாறு வியாபாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | சந்தையின் நிர்மாணங்கள் உரிய கண்காணிப்பு மற்றும் மேற்பார்வையுடன் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம், மாதம்பே மீன் விற்பனை நிலையங்களுக்காகரூபா 774,000 தொகையான 03 மாத பிணை வைப்புகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. 08 கடைகள் உடன்படிக்கையின்றி குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன. அவ்வாறே, 31 கடைகளிலிருந்து 02-08 மாதங்களுக்கு இடைப்பட்ட | உடன்படிக்கையின்றி கையளிக்கப்பட்ட காரணத்தால் 03 மாத காலத்திற்கு பிணை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவி ல்லை. நிர்மாணங்களின் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படும் வரை விற்பனைகளில் ஈடுபடாதிருக்க அந்த வியாபாரிகள் தீர்மானித்துள்ளமையால் | குறித்த சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காலத்தில் நிலுவையாக காணப்பட்ட ரூபா 2,358,800 தொகையை அறவிட்டிருக்கவில்லை. | நிலுவைப் பணத்தை அறவிடுதல் சிக்கலானதாக ஆகியுள்ளது. | |
| (இ) | 2019 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலும் இனங்காணப்படாத 25 அத்துமீறிய நிர்மாணங்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 47 ஆம் பிரிவின் பிரகாரம் அகற்றப்பட்டிருக்கவில்லை. | தற்போது தொழில்நுட்ப உத்தியோகத்தர்களால் அத்துமீறிய கட்டுமானங்கள் தொடர்பான பின்தொடர் நடவடிக்கை இடம்பெறுகின்றமை. | பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 47 ஆம் பிரிவிற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | நீர் செயற்திட்டத்திற்காக 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 742,500 தொகைக்கு 270 நீர் மானிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அவற்றுள் 177 நீர் மானிகள் பயன்படுத்தப்படாது காணப்பட்டதுடன், 185 வீடுகளுக்கு இதுவரையிலும் நீர் மானிகள் பொருத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, 12 வீட்டு அலகுகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய நீர் கட்டணம் ரூபா 18,128 தொகையானது 03 வருடங்களை விட பழமையானதாக காணப்பட்டது. | அரசின் உத்தியோகபூர்வ இல்லங்களின் நிலுவைப் பணம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படுகின்றமை மற்றும் ஏனைய பணம் நடமாடும் சேவையின் மூலம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளமை. | பயன்படுத்தப்படாது காணப்படும் நீர் மானிகள் மற்றும் நீர் பொருத்தியிராத வீடுகளில் பொருத்துவதற்கு மற்றும் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | சுமார் 1800 மெற்றிக் தொன் அளவிலான திண்மக்கழிவினை அகற்றுவதற்கு 18 ஊழியர்கள் மற்றும் 04 வாகனங்களுக்காக ரூபா 17,365,539 செலவிடப்பட்ட போதிலும், அவை சுற்றாடலுக்கு இசைவான முறையில் அகற்றப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, உக்காத கழிவுகளுக்காக நிர்மாணிக்கப்பட்ட ரூபா 2,718,707 பெறுமதியான கட்டிடம் மற்றும் ரூபா 950,000 தொகையான பொயிலர் இயந்திரம் (Hydraulic Vertical Baler) 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பயன்படுத்தப்படாது காணப்பட்டது. | பொருத்தமான இடமொன்று இல்லாதிருந்தமையால் கழிவுகள் நேரடியாக நிலையத்திற்கு அகற்றப்படுகின்றது. எதிர்காலத்தில் கழிவுகளிலிருந்து கூட்டெரு தயாரிப்பதற்கும், உக்காத கழிவு விற்பனை செய்யவோ அல்லது அழிப்பதற்கோ, மின்சார விநியோகம் கிடைத்தவுடன் பொயிலர் இயந்திரத்தை பயன்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகின்றது. | திண்மக் கழிவு முகாமைத்துவ திட்டமொன்றை தயாரித்து நடைமுறைப்படுத்தல் மற்றும் சொத்துக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும். |
| (ஊ) | அசையாத ஆதனங்கள் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், 2013 ஆம் ஆண்டின் வீதவரி மதிப்பீட்டின் பிரகாரம் வீதவரி அறவிடப்பட்டவாறு உள்ளது. | விலைமதிப்பீட்டு திணைக்களத்திடமிருந்து 2023 ஆம் ஆண்டின் போது புதிய மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படவுள்ளமை. | வீதவரி சொத்துக்கள் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பலவித்த கொம்போஸ்ட் நிலையத்தின் நிர்மாணங்கள் கைவிடப்பட்ட காரணத்தால் அதற்காக ரூபா 1,223,807 விளைவற்ற செலவினமாகியிருந்தது. | அந்த பணிகளை நிறைவு செய்ய முடியாத போதிலும், கழிவுப் பிரச்சினையை தீர்ப்பதற்கு பணம் வழங்குவதற்கு மாகாண தலைமை அமைச்சு இணங்கியிருந்தது. | செயற்திட்டத்தின் எஞ்சிய பணிகள் துரிதமாக நிறைவு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | எல்பிட்டிய பன்சல வீதி மற்றும் நாம்புலுவ ஆகியவற்றை இணைக்கும் வீதிக்காக கொள்வனவு செய்யப்பட்ட 876 அச்சுக்கற்கள் வீதியில் இழைக்கப்பட்டிராமையால் அதற்கு செலுத்திய ரூபா 56,940 விளைவற்ற செலவினமொன்றாகியிருந்தது. | பதிக்கப்பட்டிராத அந்த கற்களின் அளவினை சபைக்கு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை. | அந்த அச்சுக்கற்களை பெற்று வீதியின் நிர்மாணங்கள் நிறைவு செய்யப்பட வேண்டும். |
| (இ) | கொடகவல வாரச்சந்தை வளாகத்தின் நிர்மாணங்களின் போது ரூபா 391,492 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்ததுடன், மலசலக்கூட கட்டமைப்பினை நிர்மாணிக்கும் போது தவறான தகவல்களை குறிப்பிட்டு கூடுதலான விலைக்கேள்விக்கு பெறுகை கையளிக்கப்பட்ட காரணத்தால் ரூபா 73,686 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது. | இது கூடுதலான கொடுப்பனவு எனின், ஒப்பந்ததாரரின் பிடிகாசில் அறவிடப்படும் என்பது மற்றும் குறைவான விலையினை வழங்கிய நிறுவனத்திற்கு சமர்ப்பித்த குறிப்பு புத்தகம் (Contractors Record Book) நாளதுவரையாக்கப்பட்டிராத காரணத்தால் உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தின் உத்தியோகத்தர்களால் அனைத்து ஆவணங்களையும் பூர்த்தி செய்த நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தமை. | கூடுதலான அறவீடுகள் மீள அறவிடப்பட வேண்டும். ஒப்பந்ததாரர்களை தெரிவு செய்யும் போது பெறுகைகள் வழியாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | கொடகவெல சிறுவர் பூங்காவினை நிர்மாணிக்கும் போது ரூபா 39,913 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. உரிய பராமரிப்பொன்று இல்லாதிருந்தமையால் ரூபா 94,230 செலவிடப்பட்டு 2022 மே மாதத்தில் பதிக்கப்பட்ட புற்களில் சுமார் 80 சதவீதம் 2023 பெப்ரவரி அளவில் அழிவடைந்திருந்தது. | ரூபா 39,313 ஆன பிடிகாசினை செலுத்தும் போது கழிக்கப்படும் என்பது. பெருமளவிலான சிறுவர்கள் சிறுவர் பூங்காவிற்கு வருகை தருகின்றமையால் புற்தரைகள் அழிவடைந்துள்ளமை. | கூடுதலாக செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள் அறவிடப்பட வேண்டியதுடன், பூங்கா உரிய முறையில் பராமரிக்கப்பட வேண்டும். |
| (உ) | கொடகவெல எரியூட்டும் மயானத்தில் கொன்கிறீட் தூண்கள் மற்றும் அத்திவாரம் மற்றும் நிர்மாணிக்கப்பட்டுள்ள போது பரஸ்பர இணக்கப்பாட்டின் அடிப்படையில் 2022 ஆம் ஆண்டின் போது பணி நிறைவு | உடன்படிக்கையானது பழைய விலைக்கு பணியை நிறைவு செய்ய இயலாது என்பதை ஒப்பந்ததாரர் தெரிவித்தமையால் என்பது மற்றம் மிகைக் கொடுப்பனவொன்று | மிகைக் கொடுப்பனவுகள் கழிக்கப்பட வேண்டியதுடன், நிலவும் சட்டங்கள் மற்றும் விதிகளுக்கமைய |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்தது. அதுவரையிலும் மேற்கொண்ட பணிகளுக்காக ரூபா 1,000,000 செலுத்தப்பட்டிருந்ததுடன், ரூபா 1,040,460 செலுத்துவதற்கும் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே, இரண்டாவது பட்டியலின் விலை விலகல் (Price Adjustment) இற்காக ரூபா 385,752 தொகை கூடுதலாக செலுத்துவதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. | இடம்பெற்றிருந்தால் அவை நிறுத்தி வைக்கப்பட்ட காசிலிருந்து கழிக்கப்படும் என்பது. | செலவிடப்பட்ட பணம் ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | உக்காத கழிவினை சேகரிக்கும் நிலையத்தினை நிர்மாணிக்கும் போது அமைப்புக்குறிப்பீடுகளுக்கு இணங்காத வகைளிலான பணிகளுக்காக ரூபா 92,752 செலுத்தப்பட்டிருந்தது. | இதன் பின்னர் அவ்வாறான தவறுகள் இடம்பெறாதிருக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | மிகைக் கொடுப்பனவுகள் மீள அறவிடப்பட வேண்டும். |